# முக்கியமான
# விதிகள் மற்றும் நிபந்தனைகள்

**முழுமையான தகவல்கள் பெற**
**தயவுசெய்து வருக www.hsbc.co.in**

## 1. கட்டணங்கள்

**அ) சேர்க்கை கட்டணம் மற்றும் ஆண்டு உறுப்பினர் கட்டணம்**

பிரைமரி மற்றும் ஆட்-ஆன் கிரெடிட் கார்டுக்கு (கார்டுகளுக்கு) சேர்க்கை கட்டணம் மற்றும் ஆண்டு உறுப்பினர் கட்டணம் உரித்தாகும். இந்த கட்டணங்கள் கார்டுதாரரால் பெறப்பட்டுள்ள ஹெச்எஸ்பிஸி கிரெடிட் கார்டின் கீழ் அளிக்கப்படும் சலுகைகளைப் பொறுத்து மாறலாம். எந்த ஒரு ஆட்-ஆன் கார்டுதாரரின் (கார்டுதாரர்களின்) கட்டணங்கள் உட்பட இந்த கட்டணங்கள் உரித்தாகும் விதத்தில், கார்டு வழங்கப்படும்/புதுப்பிக்கப்படும் வேளையில் கார்டுதாரரின் கிரெடிட் கார்டு விதிக்கப்படும் மற்றும் அது எந்த மாத கணக்கில் விதிக்கப்பட்டதோ அந்த மாத கிரெடிட் கார்டு அறிக்கையில் காட்டப்படும். கிரெடிட் கார்டு முடித்துக் கொள்ளப்படுகிறது எனில் இந்த கட்டணங்கள் திருப்பி அளிக்கப்படாது. கட்டணத்தாளில் குறிப்பிடப்பட்டுள்ள தற்போதைய கட்டணங்கள் கீழே அளிக்கப்படுகின்றன.

**ஆ) ரொக்க முன்பணக் கட்டணங்கள்**

ரொக்க முன்பணக் கட்டணங்கள்

கார்டுதாரர் இந்தியா மற்றும் வெளிநாடுகளில் 24 மணி நேரமும் ஹெச்எஸ்பிஸி / விஸா / மாஸ்டர் கார்டு / சைரஸ் ஏடிஎம்களில் பணம் எடுக்கலாம். இத்தகைய ரொக்க முன்பணம் எடுக்கப்படும்போது அனைத்து பரிவர்த்தனைகளுக்கும், பரிவர்த்தனை தொகை மதிப்பில் 2.5% பரிவர்த்தனை கட்டணமாக (குறைந்தபட்சம் ரூ.300) விதிக்கப்படும். இக்கட்டணம் அடுத்த மாதக் கணக்குப் பட்டியலில் கார்டுதாரருக்கு பில் செய்யப்படும். ஹெச்எஸ்பிஸி-ன் சுய தீர்மானப்படி பரிவர்த்தனை கட்டணம் மாறுதலுக்கு உட்பட்டது. ரொக்க முன்பண பரிவர்த்தனைகள் பணம் எடுத்த தேதியில் இருந்து தினசரி தொகை மீது நடப்பு விகிதத்தில் ஒரு நிதிக் கட்டணத்துக்கும் உட்படும். இந்த நிதிக் கட்டணம் பில் சுழற்சிக் காலத்தில் கடைசி நாள் அன்று கிரெடிட் கார்டு கணக்கில் சேர்க்கப்படும்.

**இ) சில பரிவர்த்தனைகளுக்காக விதிக்கப்படும் சேவைக் கட்டணங்கள்**

- அவ்வப்போது உரித்தாகக் கூடிய கட்டணங்கள், கார்டுதாரருக்கு அளிக்கப்படும் குறிப்பிட்ட சேவைகளுக்காக கார்டுதாரரால் செலுத்தப்படக் கூடியவை அல்லது அவரது/அவளது கார்டு கணக்கை சரி செய்யத் தவறினால், செலுத்தப்படக் கூடியவை.
- ஹெச்எஸ்பிஸியின் சுய தீர்மானப்படி அவ்வப்போது கட்டண அமைப்பு மாறுதலுக்கு உட்பட்டது. நிதிக் கட்டண விகிதத்தில் (வட்டி விகிதங்கள்) மாறுதல்கள் தவிர இத்தகைய மாற்றங்கள் மற்றும் ஒழுங்கு முறை தேவைகளுக்கு காரணமானவை குறைந்தபட்சம் ஒரு மாதத்துக்கு முன்னதாக அறிவிப்பு செய்யப்பட்டு உரிய நேரத்தில் சரியானபடி அமல்படுத்தப்படும்.
- அறிவிப்பு எண் 8/2009 வாயிலாக -எஸ்டி தேதி ஃபிப்ரவரி 24,2009, சேவை வரி 10% + 2 % எஜுகேஷன் ஸெஸ் + 1% இடைநிலை மற்றும் உயர்நிலை எஜுகேஷன் ஸெஸ் எங்கள் கட்டணங்கள், வட்டி மற்றும் இதர கட்டணங்களில் உரித்தாகும்.
- செலுத்த வேண்டிய தேதியில் குறைந்தபட்சமான செலுத்த வேண்டிய தொகை செலுத்தப்படாமல் இருந்தால் தாமதமாக செலுத்துவதற்குரிய கட்டணம் உரித்தாகும்.
- நிர்ணயிக்கப்பட்டுள்ள கிரெடிட் வரம்பை தாண்டியுள்ள மொத்த பாக்கிகள் எனில் ஓவர்லிமிட் கட்டணங்கள் உரித்தாகும்.

## கட்டணத் தாள்

| | |
|---|---|
| **பொதுவான சேர்க்கைக் கட்டணம்**<br>கோல்டு/கிளாசிக் | கிடையாது |
| **பொதுவான ஆண்டு கட்டணம்**<br>கோல்டு<br>கிளாசிக் | ரூ. 2,000<br>ரூ. 700 |
| **ஆட்-ஆன் கார்டுக்கு பொதுவான ஆண்டு கட்டணம்**<br>கோல்டு<br>கிளாசிக் | ரூ. 1,000<br>ரூ. 350 |
| இலவச கிரெடிட் காலவரம்பு | 52 நாட்கள் வரை |
| நீட்டிக்கப்பட்ட கிரெடிட் மற்றும் ரொக்க முன் பணங்களின் மீது நிதிக் கட்டணங்கள் (கிளாசிக் கிரெடிட் கார்டுகள்) | மாதமொன்றுக்கு 3.5%#<br>(ஆண்டொன்றுக்கு 42%#)<br>பரிவர்த்தனை தேதியிலிருந்து கணக்கிடப்படும் |
| நீட்டிக்கப்பட்ட கிரெடிட் மற்றும் ரொக்க முன் பணங்களின் மீது நிதிக் கட்டணங்கள் (கோல்டு கிரெடிட் கார்டுகள்) | மாதமொன்றுக்கு 3.3%#<br>(ஆண்டொன்றுக்கு 39.6%#)<br>பரிவர்த்தனை தேதியிலிருந்து கணக்கிடப்படும் |
| நீட்டிக்கப்பட்ட கிரெடிட் உபயோகத்துக்கு குறைந்தபட்சம் திருப்பிச் செலுத்துதல் | ஸ்டேட்மெண்ட் முடிவு தேதி மொத்தத் தொகை இருப்பில் 5% மற்றும் பழைய பாக்கி அல்லது உச்ச வரம்புத் தொகையில் (ஏதேனும் இருந்தால்) எது அதிகமோ அது பொருந்தும். இதற்கு குறைந்தபட்சத் தொகை ரூ.100/-. நீட்டிக்கப்பட்ட கிரெடிட் தொகைக்கு விதிமுறை, நிபந்தனைகளைப் பொறுத்து வட்டி வசூலிக்கப்படும். |

| | |
|---|---|
| நகல் பட்டியல் (3 மாதங்களுக்கு முன்னதாக இருந்தால்) | ஒரு பட்டியலுக்கு ரூ. 100 |
| காசோலை திரும்பிவிட்டால், நிலையான செயல்குறிப்புபடி செயல்படுத்தப்படவில்லை அல்லது ஈசிஎஸ் மூலம் பணம் பெறப்படவில்லை எனில் அதற்கான கட்டணம் | ரூ. 350 |
| ரொக்க முன்பண வரம்பு (கிரெடிட் கார்டு கணக்கு மீது) | கிரெடிட் வரம்பில் 40%# |
| ஹெச்எஸ்பிசி கிளைகள் மற்றும் ஏடிஎம்களில் உங்கள் கிரெடிட் கார்டு கணக்கு மீது ரொக்க முன்பணங்களின் பரிவர்த்தனை கட்டணம் | பரிவர்த்தனை தொகை மதிப்பில் 2.5% **(குறைந்தபட்ச தொகை ரூ. 300-ஐப் பொறுத்து)** |
| வெளிநாட்டிலுள்ள ஏடிஎம்களின் உங்கள் வங்கி கணக்கு மீது பணம் எடுக்க பரிவர்த்தனை கட்டணம் | ரூ. 100 |
| இந்தியாவில் ஹெச்எஸ்பிசி அல்லாத ஏடிஎம்களில் உங்கள் வங்கி கணக்கு மீது பணம் எடுக்க பரிவர்த்தனை கட்டணம் | கிடையாது |
| ஓவர்லிமிட் கட்டணம் | ஒரு மாதத்துக்கு ரூ. 500 |
| தாமதமாக செலுத்த கட்டணம் (செலுத்த வேண்டிய தேதியில் பாக்கியுள்ள குறைந்தபட்ச தொகை ஹெச்எஸ்பிசி-க்கு கிடைக்காவிடில் விதிக்கப்படுகிறது) | குறைந்தபட்ச பாக்கித் தொகையில் 50% (மாதமொன்றுக்கு குறைந்தபட்சம் ரூ. 400 மற்றும் அதிகபட்சம் ரூ. 750) |
| விற்பனை சீட்டு மீண்டும் பெறுதல்/ மறுபடி நடைமுறைக் கட்டணம் | ரூ. 225 |
| வெளியூர் காசோலை நடைமுறை/சேகரிப்பு கட்டணம் | ரூ.10,000 வரை காசோலை மதிப்பில் ரூ.50<br>ரூ.10,001 முதல் ரூ.1,00,000 வரை காசோலை மதிப்பில் ரூ.100<br>ரூ.1,00,001 மற்றும் அதற்கு மேல் காசோலை மதிப்பில் ரூ.150 |
| ரீ-பேமெண்ட் செக் பிக்-அப் கட்டணங்கள் | ஒரு செக்கிற்கு ரூ.35/- |
| தொலைந்த கிரெடிட் கார்டு மாற்றித் தர கட்டணம் (இந்தியாவில்) | ரூ. 100 |
| தொலைந்த கிரெடிட் கார்டு மாற்றித் தர கட்டணம் (இந்தியாவுக்கு வெளியே) | ரூ. 100 |
| வெளிநாட்டு பணமதிப்பு பரிவர்த்தனையில் பண மாற்று கட்டணம் | 3.5% |
| இதர வங்கி ஏடிஎம்களில் கிரெடிட் கார்டு இருப்பு விசாரணை | கிடையாது |
| கிரெடிட் கார்டு அப்கிரேடு/டிரான்ஸ்பர் கட்டணம் | அப்கிரேடு/டிரான்ஸ்பருக்கு ரூ.99/ |
| ரிவார்ட்ஸ் ரிடெம்ப்ஷனுக்கு ஹாண்ட்லிங் கட்டணம் | ரிடெம்ப்ஷனுக்கு ரூ.50/- |

# அல்லது அவ்வப்போது வங்கியால் தீர்மானிக்கப்படுவது போல்
*மாதாந்திர நிதிக் கட்டணம் நடப்பு விகிதத்தில் பொருந்தும். உதா: நீங்கள் மார்ச் 01 அன்று ரூ.1,200/-க்கு ஒரு வாட்ச் வாங்குகிறீர்கள். மார்ச் 10 அன்று ரூ.800/-க்கு ஒரு நெக்லஸ் வாங்குகிறீர்கள். நீங்கள் வாங்கும் பொருட்களின்மீது கீழ்க்கண்ட வட்டிவிகித முறையில் வசூலிக்கப்படும் :

| | கோல்டு கிரெடிட் கார்ட்ஸ் | க்ளாசிக் கிரெடிட் கார்ட்ஸ் |
|---|---|---|
| மார்ச் 20 ஸ்டேட்மெண்ட்டில் பாக்கி என்று காட்டப்பட்ட தொகை | ரூ. 2000 | ரூ. 2000 |
| கடைசித் தேதி ஏப்ரல் 11 அன்று செலுத்திய தொகை | ரூ. 100 | ரூ. 100 |
| எடுத்துச் செல்லப்படும் மீதித்தொகை (சுழற்சி முறை) | ரூ. 1900 | ரூ. 1900 |
| வட்டி கணக்குகள் (மாதத்திற்கு ៖ 3.3% கோல்டுக்கு மற்றும் ៖ 3.5% க்ளாசிக்குக்கு)<br>1) வட்டி ரூ.1200க்கு 41 நாட்களுக்கு (மார்ச்1 முதல் ஏப்ரல் 10 வரை) | ரூ. 53.38 | ரூ. 56.61 |
| 2) வட்டி ரூ. 800க்கு 32 நாட்களுக்கு (மார்ச்10 முதல் ஏப்ரல் 10 வரை) | ரூ. 27.77 | ரூ. 29.46 |
| 3) வட்டி ரூ. 1900க்கு 10 நாட்களுக்கு (ஏப்ரல் 11 முதல் ஏப்ரல் 20 வரை) | ரூ. 20.61 | ரூ. 21.86 |
| ஏப்ரல் 20 ஸ்டேட்மெண்ட்டில் கட்ட வேண்டிய மொத்த வட்டி | ரூ. 101.77 | ரூ. 107.93 |
| வட்டிமீது ៖10.3%சேவை வரி | ரூ. 10.48 | ரூ. 11.12 |
| ஏப்ரல் 20 ஸ்டேட்மெண்ட்டில் பாக்கித் தொகை | ரூ. 2012.25 | ரூ. 2019.05 |

மாதந்தோறும் குறைந்தபட்சத் தொகையை மட்டும் செலுத்துவது மீண்டும் செலுத்தும் தொகை முழுவதுமாக முடியும் வரை நீட்டிக்கப்படுவதாகும். இந்த நீட்டிக்கப்பட்ட காலத்தில் தொடர்ந்து பாக்கியிருக்கும் தொகை பின்வரும் தொகையுடன் சேர்க்கப்படும். உதா : பாக்கித் தொகை ரூ.5,000 எனில், உங்கள் கிரெடிட் கார்டில் புது டிரான்சாக்ஷன்கள் செய்ய மாட்டீர்கள். தற்போதைய கட்டண விகிதப்படி 7.5 ஆண்டுகள் வரை தொடர்ந்து செலுத்திக் கொண்டேயிருக்க வேண்டும்.

**ஈ) வட்டி இல்லாத (சலுகை) காலவரம்பு**

கிரெடிட் கார்டு கணக்கில் எந்த வித நிதிக் கட்டணமும் விதிக்கப்படாமல் கார்டுதாரர்கள் 52 நாட்கள் வரை இலவச கிரெடிட் பெற முடியும். மாதாந்திர கிரெடிட் கார்டு பட்டியலில் காட்டப்பட்டுள்ள கிரெடிட் கார்டு பாக்கித் தொகையை செலுத்த வேண்டிய தேதியில் முழுமையாகச் செலுத்தி இருந்தால் இந்த சலுகை கிடைக்கும். எனினும் ரொக்க முன்பணப் பரிவர்த்தனைகளுக்கு இலவச கிரெடிட் காலவரம்பு உரித்தாகாது.

**உ) நிதிக் கட்டணங்கள்**

- மொத்த மாத பாக்கியில் (மாதாந்திர கிரெடிட் கார்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தபட்ச செலுத்தப்பட வேண்டிய தொகை) குறைந்தபட்சம் 5% செலுத்துவதன் பேரில் ''நீட்டிக்கப்பட்ட கிரெடிட் வசதியை'' கார்டுதாரர்கள் பெறலாம். செலுத்த வேண்டிய தேதிக்கு பின்பு பாக்கியுள்ள தொகைக்கு வட்டி விதிக்கப்படும்.
- நீட்டிக்கப்பட்ட கிரெடிட் வசதியைப் பயன்படுத்தும் கார்டுதாரர்கள், அறிக்கையில் காட்டப்பட்டுள்ள முடிப்பு இருப்பு தொகையை விட குறைவாக செலுத்தினால், மொத்த பாக்கி தொகைக்கும் சம்பந்தப்பட்ட பரிவர்த்தனை தேதியில் இருந்து அப்போது நிலவும் ஒரு நிதிக் கட்டணம் விதிக்கப்படும்.எல்லா புதிய பரிவர்த்தனைகளுக்கும் சம்பந்தப்பட்ட பரிவர்த்தனை தேதியில் இருந்து ஒரு நிதிக் கட்டணம் விதிக்கப்படும்.
- அனைத்து ரொக்க முன்பண பரிவர்த்தனைகளுக்கும் பணம் எடுத்த தேதியில் இருந்து, கட்டணங்கள் உடன் முழுத் தொகையும் செலுத்தப்படும் வரை நடப்பு விகிதத்தில் அப்போது நிலவும் ஒரு நிதிக் கட்டணம் விதிக்கப்படும்.
- நிதிச்சேவைக் கட்டணங்கள் கணக்கிடும் முறையின்படி, கோல்டு கிரெடிட் கார்டுகளுக்கு டிரான்சாக்ஷன் ஆன தேதியிலிருந்து மாதத்திற்கு @3.3% (ஆண்டுக்கு 39.6%)வீதம் மற்றும் கிளாசிக் கிரெடிட் கார்டுகளுக்கு மாதத்திற்கு @3.5% (ஆண்டுக்கு 42%) வீதம் அல்லது வங்கியால் அவ்வப்போது திருத்தப்பட்ட விகிதங்கள் பொருந்தும்.

## 2. கிரெடிட் வரம்புகள்

- கிரெடிட் வரம்பு மற்றும் கேஷ் வித்டிராவல் வரம்புகள் ( 40% கிரெடிட் வரம்பு அல்லது அவ்வப்போது வங்கி எடுக்கும் முடிவின்படி) கார்டு டெலிவரியின்போது உங்களுக்குத் தெரிவிக்கப்படும்.உங்கள் மாதாந்திர கார்டு ஸ்டேட்மெண்ட்டிலும் குறிப்பிடப்பட்டிருக்கும். கிடைக்கக்கூடிய கிரெடிட் வரம்பு மாதாந்திர ஸ்டேட்மெண்ட்டில் ஒரு பகுதியாக காட்டப்படும்.முன் அறிவிப்பு அல்லது தகவல் ஏதுமின்றி கிரெடிட் வரம்பை குறைக்கும் உரிமை வங்கிக்கு உண்டு. கார்டை பயன்படுத்தினாலே, அவ்வப்போது அளிக்கப்படும் கிரெடிட் வரம்புகளை ஏற்றுக் கொண்டதாகக் கொள்ளப்படும்.
- கிரெடிட் வரம்பு என்பது அதிகபட்ச தொகை, எந்த ஒரு குறிப்பிட்ட நேரத்திலும் கிரெடிட் கார்டு கணக்குக்கு எதிராக பாக்கியுள்ள தொகை ஆக இருக்கும்.
- ஒரு வேளை மொத்த பாக்கித் தொகை கிரெடிட் வரம்பை தாண்டிவிட்டால் வரம்புக்கு அப்பாற்பட்ட மேற்கொள்ளப்படும் அனைத்து கொள்முதல்கள்/ ரொக்க பரிவர்த்தனைகள் கிரெடிட் கார்டு கணக்குக்கு முழுமையாக அல்லது பகுதியாக பணம் கணக்கில் ஏற்றப்படும் வரை மறுக்கப்படும்.
- கணக்குக்கு ஒப்புதல் அளிக்கப்படும் கிரெடிட் வரம்பு பிரைமரி கார்டுதாரர் மற்றும் ஆட்-ஆன் கார்டுதாரர்களால் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.
- கிரெடிட் கார்டு கணக்கில் கிடைக்கும் கிரெடிட் வரம்பு 'மொத்த பாக்கித் தொகையில்' நிர்ணயிக்கப்பட்ட கிரெடிட் வரம்பை கழித்து கிடைக்கும் மதிப்பாகும். எந்த ஒரு நேரத்திலும் கிடைக்கக் கூடிய கிரெடிட் வரம்பை உறுதிப்படுத்திக் கொள்ள கார்டுதாரர் வங்கியிடம் தகவல் கேட்க வேண்டும்.
- ஆறு மாதங்கள் வரை திருப்திகரமான கிரெடிட் கார்டு இயக்கங்களுக்குப் பின்பு எந்த நேரத்திலும் கார்டுதாரர் அவரது நிர்ணயிக்கப்பட்ட கிரெடிட் வரம்பை பரிசீலிக்க விண்ணப்பிக்கலாம்.

## 3. பில்லிங் மற்றும் பேமெண்ட்டுகள் :

அ ) கார்டுதாரர் கணக்கில் செலுத்திய தொகை கீழ்க்கண்ட வரிசையில் கணக்கு வைத்துக் கொள்ளப்படும்.

1. கேஷ் பரிமாற்ற சேவைக் கட்டணங்கள்*
2. ரீடெய்ல்பரிமாற்ற சேவைக் கட்டணங்கள்*
3. ஆண்டுக் கட்டணம்
4. தாமதக் கட்டணம்
5. ஓவர் லிமிட் கட்டணம்
6. தவணை முறை கையாளும் கட்டணம்
7. தவணை முறை ப்ராசஸிங் கட்டணம்
8. ரிடர்ன் செக் கட்டணம்
9. இன்ஷ்யூரன்ஸ் பிரீமியம்
10. வட்டிக் கட்டணங்கள்

அ. பேலன்ஸ் டிரான்ஸ்பர் வட்டி
ஆ. கேஷ் டிரான்சாக்ஷன் வட்டி
இ. பர்ச்சேஸ் டிரான்சாக்ஷன் வட்டி

11. அசல் தொகை

அ. பேலன்ஸ் டிரான்ஸ்பர் அசல்
ஆ. கேஷ் டிரான்சாக்ஷன் அசல்
இ. பர்ச்சேஸ் டிரான்சாக்ஷன் அசல்

* சேவைக் கட்டணங்களில் கீழ்க்கண்டவை அடங்கும்.

• கேஷ் சேவைக் கட்டணங்கள்
- கேஷ் அட்வான்ஸ் கட்டணம்
- சேவை வரி

• ரீடெய்ல் சேவைக் கட்டணங்கள்
- கார்டு ரீப்ளேஸ்மெண்ட் கட்டணம்
- ஸ்டேட்மெண்ட் ரீபிரிண்ட் கட்டணம்

- பேலன்ஸ் டிரான்ஸ்பர் ப்ராசஸிங் கட்டணம்
- ஸ்டாண்டிங் இன்ஸ்ட்ரக்ஷன் (எஸ்ஐ) ஃபெயில்டு கட்டணம்
- ஸ்டாண்டிங் இன்ஸ்ட்ரக்ஷன் (எஸ்ஐ)கட்டணம்
- பின் சார்ஜ் கட்டணம்
- கார்டு ப்ளாக்கிங் கட்டணம்

ஆ) கிரெடிட் கார்டு கணக்கில் ஒரு பாக்கி இருந்தால், ஹெச்எஸ்பிஸி முந்தைய அறிக்கையிலிருந்து மாதாந்திர வகை வாரியான கணக்கு பட்டியலை, அதாவது கார்டுதாரரின் கணக்கில் வரவு வைக்கப்பட்ட தொகைகள் மற்றும் கழிக்கப்பட்ட பரிவர்த்தனைகளை குறிப்பிட்டு கார்டுதாரரின் தபால் முகவரிக்கு அனுப்பும். இந்த அறிக்கை கிடைக்கவில்லை என்றாலும் கார்டுதாரரின் பொறுப்புக்கள் மற்றும் கடமைகளைப் பாதிக்கப்படாது.

இ) கார்டுதாரர்கள் ஸ்டேட்மெண்ட்டில் கொடுக்கப்பட்டுள்ளது போல செலுத்த வேண்டிய குறைந்தபட்ச தொகையை மட்டும் செலுத்த தேர்ந்தெடுக்கலாம்.அவ்வாறு செலுத்தும் தொகையை கடைசித் தேதிக்குள் செலுத்த வேண்டும்.இதுவும் ஸ்டேட்மெண்ட்டில் கொடுக்கப்பட்டுள்ளது. செலுத்த வேண்டிய தொகையை செக் மூலம் செலுத்தினால், அக்கவுண்ட்டில் கடைசித் தேதிக்குள் தொகை கிடைக்கப் பெற வேண்டும். அடுத்த கால வரம்பிற்கு கொண்டு செல்லப்படும் பாக்கித் தொகையின்மீது கோல்டு கிரெடிட் கார்டுகளெனில், மாதந்தோறும் 3.3%ம் (ஆண்டுதோறும் 39.6%ம்), க்ளாஸிக் கிரெடிட் கார்டுகளெனில், மாதந்தோறும் 3.5%ம் (ஆண்டுதோறும் 42%ம்), அல்லது அவ்வப்போது வங்கிகள் நிர்ணயிக்கும் விகிதங்கள் பொருந்தும்.

ஈ) மாதாந்திரம் செலுத்த வேண்டிய பாக்கிகளை செட்டில் செய்ய கார்டுதாரர்கள் கீழ்க்கண்ட முறைகளை தேர்ந்தெடுக்கலாம்.

- செக்/டிராஃப்ட் மூலம் செலுத்துதல்: செக்/டிராஃப்ட் "HSBC A/c No. XXXX XXXX XXXX XXXX" (கார்டுதாரரின் 16 இலக்க கிரெடிட் கார்டு எண்ணைக் குறிப்பிடுங்கள்) என்ற கணக்கில் செலுத்தப்பட வேண்டும். செக்/டிராஃப்ட் மூலம் செலுத்துவதனால் கீழ்க்கண்டவாறு செய்யலாம்.
  - இந்தியாவில் ஹெச்எஸ்பிஸி கிளைகளில்/ஏடிஎம்களில் வைக்கப்பட்டுள்ள ட்ராப் பாக்ஸ்களில் போடலாம் (கிளைகள் மற்றும் ஏடிஎம்களின் முழுமையான பட்டியலுக்கு வருக www.hsbc.co.in) - ஸ்கைபாக் ட்ராப்-பாக்ஸ்கள் - உங்களுக்கு அருகிலுள்ள பகுதிகளில் அமைக்கப்பட்டு உள்ள ஸ்கைபாக் பெட்டிகள் பட்டியலை அறிய வருக www.hsbc.co.in)
  - ஹாங்காங் அண்ட் ஷாங்காய் பாங்கிங் கார்பொரேஷன் லிமிடெட், க்ளியரிங் டிபார்ட்மென்ட், எம். ஜி. ரோடு, ஃபோர்ட், மும்பை-400 001 எனும் முகவரிக்கு அனுப்பலாம்.
- ரொக்கமாக செலுத்துதல் : இந்தியாவில் எந்த ஹெச்எஸ்பிஸி கிளையிலும் ரொக்கமாக பணம் செலுத்தலாம்.
- நிலையான செயல்குறிப்பு: கார்டுதாரர் ஹெச்எஸ்பிஸி கணக்குதாரர் எனில், அவர் / அவள் கார்டுதாரரின் ஹெச்எஸ்பிஸி-ன் கணக்கில் இருந்து கிரெடிட் கார்டு கணக்குக்கு பணத்தை மாற்ற ஒரு நிலையான செயல்குறிப்பை அளிக்கலாம்.
- இன்டர்நெட் வங்கிச் சேவை : கார்டுதாரர் www.hsbc.co.in இணையதளத்தின் மூலம் கிரெடிட் கார்டு பாக்கியைச் செலுத்தலாம்.
- ஈசிஎஸ்: எந்த ஒரு வங்கியிலும் கார்டுதாரரின் கணக்கில் இருந்து பணத்தை கழித்துக் கொள்ள ஹெச்எஸ்பிஸிக்கு அங்கீகாரம் அளித்து கார்டுதாரர்கள் நேரடியாகப் பணம் செலுத்தலாம். இந்த வசதி மும்பை மற்றும் டெல்லியில் மட்டுமே கிடைக்கிறது.
- ஏடிஎம்/போன் பாங்கிங் : கிரெடிட் கார்டு பாக்கிகளுக்கு எதிராக பணம் செலுத்த ஏடிஎம்/போன் பாங்கிங் வசதி மூலம் ஹெச்எஸ்பிஸியில் உள்ள தன் கணக்கை கார்டுதாரர் தொடர்பு கொள்ளலாம்.

**உ) பில்லிங் பற்றிய விவாதங்களுக்கான தீர்வு:**

- கார்டுதாரர் கடந்த மாத ஸ்டேட்மெண்ட்டை அது கையில் கிடைக்கும்போது அல்லது வங்கி அனுப்பிய 10 நாட்களுக்குப் பிறகு (எது முன்னால் வருகிறதோ அது பொருந்தும், இதுவே குறிப்பிட்ட கால வரம்பு) பெற்றுக் கொண்டதாக கொள்ளப்படும். ஒவ்வொரு ஸ்டேட்மெண்ட்டும் கிடைத்தவுடன் அதில் ஏதேனும் தவறுகள், விடுபட்டுப்போனவைகள், ஒழுங்கீனங்கள் ஆகியவற்றுடன் ஏமாற்றுதல் அல்லது அங்கீகரிக்கப்படாத டிரான்சாக்ஷன்கள் அல்லது வேறு ஏதேனும் மறுப்புகள் ஆகியவையும் அடங்கி இருந்தால் மேலே குறிப்பிட்ட கால வரம்பிலிருந்து 30 (முப்பது) நாட்களுக்குள் வங்கிக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.கார்டுதாரர் 30 (முப்பது) நாட்களுக்குள் வங்கிக்கு தெரிவிக்க தவறினால்,ஸ்டேட்மெண்ட் ஆஃப் அக்கவுண்ட் மற்றும் அதில் உள்ள என்ட்ரிக்கள் இறுதியான அத்தாட்சியாகும். கார்டுதாரர் மற்றும்/அல்லது கார்டுதாரர் மூலமாக அல்லது அவரின்கீழ் உரிமை கோருபவராக இருந்தால், அவர்மீதும் உரிமைகோரல் செல்லுபடியாகும். இதற்கு வேறு எந்த அத்தாட்சியும் தேவையில்லை. வங்கி எந்த பரிவர்த்தனைக்கும் அனைத்து கடன்களிலிருந்தும் (அனைத்து கட்டணங்கள், சேதங்கள் மற்றும் வரிகள், அபராதங்கள், கட்டணங்கள் செலுத்தியவை மற்றும்/அல்லது ஏற்பட்டவை) என்று எந்த வகை இழப்பீடுகள் ஆனாலும் விடுவிக்கப்படும். ஆனால், விதி விலக்காக கடைசியாக கிடைத்த ஸ்டேட்மெண்ட் வரை நிகழ்ந்த டிரான்சாக்ஷன்கள் கார்டுதாரர் வங்கிக்கு தெரிவித்திருந்தால் அது போக மீதிக்கு பொருந்தும்.
- பில்லிங் தொடர்பான தவறுகளை ரிபோர்ட் செய்ய கார்டுதாரர்கள் வாடிக்கையாளர் சேவை மையத்தையோ (மாதாந்திர ஸ்டேட்மெண்ட்டின் பின்புறம் கொடுக்கப்பட்ட எண்கள் அல்லது www.hsbc.co.inல்) தொடர்பு கொள்ளவும் அல்லது கே சி மஹேஷ், மேலாளர், கிரெடிட் கார்டு சர்வீசஸ்,அம்பால் ஹவுஸ், 610, அண்ணா சாலை,சென்னை- 600 006 என்ற முகவரிக்கு எழுதவும். அனைத்து புகார்களையும் திருமதி. சத்யா சீனிவாசன்,நோடல் ஆஃபீசர், தி ஹாங்காங் அண்ட் ஷாங்காய் பேங்கிங் கார்ப்பரேஷன் லிமிடெட், எண். 96, டாக்டர். ராதாகிருஷ்ணன் சாலை, மைலாப்பூர், சென்னை - 600 004. இந்திய ரிசர்வ் வங்கி தீர்வாளரை நியமித்துள்ளது. ஹெச்எஸ்பிசியிடம் புகார் செய்யாதவர்கள் தீர்வாளரிடம் தங்கள் புகார்களை சமர்ப்பிக்கலாம். வாடிக்கையாளருக்கு 60 நாட்களுக்குள் பதில் கிடைக்காவிட்டால் அல்லது பதில் திருப்திகரமாக இல்லாது போனால் தீர்வாளரை அணுகலாம்.

## 4. தவறு நிகழ்தல்

- தவறு நிகழ்ந்தால் (செலுத்த வேண்டிய தேதியில் குறைந்தபட்ச பாக்கித் தொகை செலுத்தப்படாவிட்டால் அல்லது கார்டுதாரரின் ஒப்பந்தத்தில் ஏதேனும் பிரிவு மீறப்பட்டால்) கிரெடிட் கார்டு கணக்கில் உள்ள ஏதேனும் பாக்கிகளுக்காக கார்டுதாரருக்கு தபால், ஃபேக்ஸ், தொலைபேசி, ஈ-மெயில், எஸ்எம்எஸ் செய்தி மூலம் நினைவூட்டல்கள் அனுப்பப்படும் மற்றும்/அல்லது கார்டுதாரர்களுக்கு நினைவூட்ட, தொடர்ந்து கேட்க மற்றும் பாக்கியைச் சேகரிக்க சேகரிப்பு நோக்கங்களுக்காக நியமிக்கப்பட்ட மூன்றாம் தரப்பினரால் நினைவூட்டல்கள் செய்யப்படும். இதற்காக நியமிக்கப்படும் எந்த மூன்றாம் தரப்பினரும் கடன் பாக்கி சேகரிப்பில் இந்திய வங்கிகளின் அமைப்பு (ஐபிஏ) நடத்தை நெறிகளைப் பின்பற்றுவார்கள்.
- கார்டுதாரர் மரணம் அடைந்து விட்டால் பாக்கியை வசூலித்தல் :
  - மொத்த பாக்கியும் (பில் செய்யப்படாத பரிவர்த்தனைகள் உட்பட) உடனடியாக ஹெச்எஸ்பிசிக்கு செலுத்தப்படக் கூடியதாகும்.
  - ஹெச்எஸ்பிசி கார்டுதாரரின் வாரிசுதாரர்களுக்கு வரும் சொத்திலிருந்து மொத்த பாக்கியையும் வசூலிக்கும் உரிமை உடையது.
- ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியா வழிகாட்டல்களின்படி நாங்கள் எங்கள் கிரெடிட்கார்டுதாரர்கள் சம்பந்தப்பட்ட கிரெடிட் தகவலை கிரெடிட்

இன்ஃபர்மேஷன் ஃப்யூரோ (இந்தியா) லிமிடெட் (சிஐபிஐஎல்) க்கு மாதாந்திர அடிப்படையில் அளிப்போம். அளிக்கப்படும் தகவலில் முந்தைய மாத கடைசியில் உள்ள நிலை மற்றும் கிரெடிட் கார்டு கணக்கு ஒழுங்கான நிலையில் உள்ளதா அல்லது.தவறு ஏதேனும் உள்ளதா என்பது பற்றிய தகவலும் இதில் இருக்கும். ஒரு வேளை இத்தகைய அறிக்கை தேதியில் கிரெடிட் கார்டு கணக்கு தவறானால் மற்றும் கணக்கு இதைத் தொடர்ந்து ஒழுங்குபடுத்தப்படுமானால், கணக்கின் நிலை அடுத்த மாத அறிக்கையின் போது மட்டுமே சரியாக நடப்பு நிலைப்படி சரி செய்யப்படும். சிஐபிஐஎல்-ன் படி வாடிக்கையாளர் நிலையில் அனைத்து மாற்றங்கள் அதிகபட்சம் 30 நாட்களில் சரி செய்யப்படுகின்றன. சிஐபிஐஎல் உடன் ஏதாவது கசப்பான நிகழ்வைத் தவிர்க்க, கிரெடிட் கார்டுதாரர்கள் கார்டு கணக்கில் பாக்கியுள்ள தொகையை சரியான வேளையில் செலுத்துவதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

## 5. முடிவுறுதல்

- ஹெச்எஸ்பிசிக்கு எழுத்து மூலம் அளித்த அறிக்கை மூலம் நீங்கள் இந்த ஒப்பந்தத்தை முடித்துக் கொள்ளலாம். அத்துடன் நீங்கள் கிரெடிட் கார்டையும், கூடுதல் கிரெடிட் கார்டுகளையும் பல துண்டுகளாக வெட்டி இணைத்து அனுப்ப வேண்டும். பாக்கித் தொகை முழுவதையும் செலுத்தி இருக்க வேண்டும். இந்த ஒப்பந்தம் கூடுதல் கிரெடிட் கார்டு பயன்படுத்துவதைப் பற்றியதாக இருந்தால் ஹெச்எஸ்பிசிக்கு எழுத்து மூலம் அறிக்கை கொடுத்து கூடுதல் கிரெடிட் கார்டை துண்டித்துக் கொள்ளலாம். கூடுதல் கிரெடிட் கார்டை மேக்னெட்டிக் ஸ்ட்ரிப் மூலமாக பல்வேறு துண்டுகளாக வெட்டி அனுப்பவும்.
- ஹெச்எஸ்பிசி உங்கள் கிரெடிட் கார்டு (கள்) /ஆட்-ஆன் கார்டு (கள்) மீது உள்ள பாக்கித் தொகையை எந்தக் காரணமும் கூறாமல் மீண்டும் கேட்கும் உரிமை கொண்டது.ஹெச்எஸ்பிசி முழு பாக்கித் தொகையை மீண்டும் கேட்கும்போது அதை செலுத்துவதற்கு உங்களுக்கு போதுமான அறிவிப்பு அளிக்கும்.
- இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு மாறாக வேறெங்கும் இல்லாத வரையில், ஹெச்எஸ்பிசி உங்களுக்கு எந்த முன்னறிவிப்புமின்றி உங்கள் கிரெடிட் கார்டு அக்கவுண்ட் அல்லது கிரெடிட் கார்டு/ஆட்-ஆன் கார்டு (கள்) ஆகியவற்றிற்கு வழங்கிய வரம்பை ரத்து செய்யலாம். ஹெச்எஸ்பிசி உங்கள் கிரெடிட் கார்டு அக்கவுண்ட் அல்லது கிரெடிட் கார்டு/ஆட்-ஆன் கார்டு(கள்) ஆகியவற்றிற்கு அளித்த வரம்பை ரத்து செய்தால், ஹெச்எஸ்பிசி அந்த ரத்தை உங்களுக்கு தெரிவிக்கும்.
- கிரெடிட் கார்டு அக்கவுண்ட்டில் உள்ள மீதித் தொகை முழுவதும், பாக்கியிருக்கும் கிரெடிட் கார்டு டிரான்சாக்ஷனின் கணக்கு வைக்க வேண்டிய தொகை உட்பட ஒப்பந்தத்தை தடை செய்த / முடிக்கப்பட்ட உடனேயே, அது என்ன காரணமாக இருந்தாலும் அல்லது திவாலா ஆனாலும் அல்லது கிரெடிட் கார்டுதாரரின் மரணம் நிகழ்ந்தாலும் உடனடியாக செலுத்த வேண்டியிருக்கும். ஹெச்எஸ்பிசி பாக்கித் தொகையுடன் எல்லா செலவுகள், வழக்கு செலவுகள், நிதிச்சேவை கட்டணங்கள் மற்றும் கிரெடிட் கார்டுதாரரின் மரணத்தில் அவரது சொத்திலிருந்து வரும் வட்டி,மற்ற எந்த உரிமைக்கு கேடு வராத சேவைக் கட்டணங்கள் மற்றும் பாக்கித் தொகையை முழுவதுமாக செலுத்தி முடிக்கும் தேதி வரை நடப்பிலிருக்கும் விகிதத்தில் பிற கட்டணங்கள் ஆகியவற்றை வசூலிக்கும் உரிமை கொண்டது.
- ஹெச்எஸ்பிசி இதன்படி உங்களுக்கு தெரிவிக்கும் தகவல்,நீங்கள் கடைசியாக ஹெச்எஸ்பிசிக்கு தெரிவித்த முகவரிக்கு அனுப்பிய ஏழு நாட்களுக்குள் நீங்கள் பெற்றுக் கொண்டதாகக் கொள்ளப்படும்.
- கிரெடிட் கார்டை முடித்துக் கொள்வதால், கிரெடிட் கார்டு மற்றும்/அல்லது கிரெடிட் கார்டு எண் பயன்படுத்தி பெறக்கூடிய கேஷ் வித்டிராவல் வசதிகள் அனைத்தும் ரத்து செய்யப்படும்.

## 6. கார்டு தொலைதல்/திருட்டு/தவறாகப் பயன்படுத்தப்படுதல்

அ) கிரெடிட் கார்டு தொலைந்தால், திருடப்பட்டால், கார்டுதாரர் எழுத்துப்பூர்வமாக ஹெச்எஸ்பிஸிக்கு தெரிவிக்க வேண்டும் அல்லது வாடிக்கையாளர் சேவை மையத்தை அழைத்து தெரிவிக்க வேண்டும்.

ஆ) ஹெச்எஸ்பிஸிக்கு கார்டு தொலைந்து விட்டது/திருடப்பட்டு விட்டது/தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என கார்டுதாரர் தகவல் தெரிவித்த பின் அந்த கிரெடிட் கார்டு மூலம் ஏதாவது பரிவர்த்தனை மேற்கொள்ளப்பட்டிருந்தால் அதற்கு கார்டுதாரர் பொறுப்பாக வேண்டியதில்லை.

இ) மேலே (அ)ல் குறிப்பிட்டபடி தொலைந்துபோதல் அல்லது திருட்டுப் போதல் பற்றித் தெரிவிக்கப்பட்டாலும் சரி, கார்டுதாரர் ஹெச்எஸ்பிஸி இடம் இதை எழுத்துப்பூர்வமாகத் தெரிவிக்க வேண்டும். எழுத்துப்பூர்வமாக உறுதிப்படுத்துவதோடு காவல்துறைக்கு ஒரு புகார் கொடுத்து அதை காவல்துறை ஏற்றுக் கொண்ட நகலும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

ஈ) கார்டுதாரருக்கு அவரது கிரெடிட் கார்டு திரும்பக் கிடைத்தாலும் அவர் அதை மீண்டும் பயன்படுத்தக் கூடாது. தயவுசெய்து மாக்னெடிக் ஸ்ட்ரிப் உள்ள பகுதியைச் சேர்த்து கார்டை பல துண்டுகளாக வெட்டி கார்டை சிதைத்து விடுங்கள்.

## 7. தகவல் தெரிவித்தல்கள்

- கார்டுதாரர் ஹெச்எஸ்பிஸி ஏதாவது ஆட்-ஆன் கார்டுதாரர் (கார்டுதாரர்களின்) கணக்கு உட்பட அவரது/அவளது கணக்கு விபரங்கள், வங்கிக்கு ஏதாவது ஆதரவு வகை சேவைகள் பெறுவதற்காக மூன்றாம் தரப்பு ஏஜென்டுகளுக்கு வழங்கும் ஹெச்எஸ்பிஸியின் உரிமைகளையும் மற்றும் இதற்காக அவரிடமிருந்து/ அவளிடமிருந்து அல்லது ஏதாவது ஏதாவது ஆட்-ஆன் கார்டுதாரர்களிடம் இருந்து வங்கி எந்த குறிப்பிட்ட ஒப்புதலும் பெறத் தேவையில்லை என்பதையும் ஒப்புக் கொள்கிறார்.
- மேலும் கார்டுதாரருக்கு/ஆட்-ஆன் கார்டுதாரருக்கு ஹெச்எஸ்பிஸியின் திட்டங்கள் சலுகை, விற்பனை அல்லது விநியோகத்தை மற்றும் சேவைகளை அளிப்பது சம்பந்தமாக அவரால்/அவளால் அளிக்கப்பட்டிருந்தாலும் இல்லாவிட்டாலும் அவரது/அவளது மற்றும் ஆட்-ஆன் கார்டுதாரரின் (கார்டுதாரர்களின்) சம்பந்தப்பட்ட தகவல் அல்லது தரவை ஹெச்எஸ்பிஸி பயன்படுத்த கார்டுதாரர் அங்கீகரிக்கிறார். மேலும் கார்டுதாரர், ஹெச்எஸ்பிஸி தகுந்தது மற்றும் தேவையானது எனக் கருதும் விதத்தில் தற்போது மற்றும் வருங்காலத்தில் கிரெடிட் ப்யூரோக்களுக்கு கிரெடிட் ரெஃபரன்ஸ் ஏஜென்டுகளுக்கு ஹெச்எஸ்பிஸி அவ்வப்போது தீர்மானிப்பது போல, கார்டுதாரர் அவரது/அவளது கடமையை நிறைவேற்றும்போது செய்த ஏதாவது தவறு உட்பட கார்டுதாரரின்/ஆட்-ஆன் கார்டுதாரர் (கார்டுதாரர்கள்) சம்பந்தப்பட்ட தகவலை பகிர்ந்து கொள்ள அங்கீகாரம் உடையது என்பதையும் ஏற்றுக் கொள்கிறார். எனவே, கார்டுதாரர் இத்தகைய கிரெடிட் ப்யூரோக்களுக்கு/ ரெஃபரன்ஸ் ஏஜென்டுகளுக்கு தகவலை தெரிவிக்க ஒப்புதல் அளிக்கிறார் மற்றும் ஆட்-ஆன் கார்டுதாரரிடம் (கார்டுதாரர்களிடம்) இருந்து ஒப்புதலைப் பெற்றுள்ளதை உறுதி செய்கிறார். இத்தகைய அமைப்புக்கள் வங்கிகள்/நிதி அமைப்புக்களுக்கு மற்றும் இதர கிரெடிட் கியாரண்டர்களுக்கு பரிசீலனை தகவல் அல்லது தரவு அல்லது திட்டங்களை கிடைக்கச் செய்யலாம்.
- கிரெடிட் இன்ஃபர்மேஷன் கம்பெனி சட்டம், 2005ன் படி ஒரு கிரெடிட் தகவல் நிறுவனத்துக்கு (ஆர்பிஐ-ஆல் குறிப்பாக அங்கீகரிக்கப்பட்டது) கார்டுதாரரின் கிரெடிட் விவரங்கள்/திருப்பிச் செலுத்திய தகவல் சம்பந்தமான தகவலையும் ஹெச்எஸ்பிஸி அளிக்கலாம்.

## கூடுதல் விபரங்களுக்கு தயவுசெய்து எங்கள் வாடிக்கையாளர் சேவை மையங்களைத் தொடர்பு கொள்க :

• அகமதாபாத்: 98983 77373 • பெங்களூர்: 2558 9696
• சண்டிகர்: 98769 27373 • சென்னை: 4341 9696
• கோயம்புத்தூர்: 98944 77373 • குர்காவ்: 99107 97373
• ஹைதராபாத்: 2335 8787 • இந்தோர்: 98932 77373
• ஜெய்ப்பூர்: 99280 37373 • ஜோத்பூர்: 99280 37373
• கொச்சி: 98954 77373 • கொல்கத்தா: 2243 8686
• லக்னோ: 99350 97373 • லூதியானா: 98769 27373
• மும்பை: 6680 0001 • மைசூர்: 99809 27373
• நாக்பூர்: 98601 07373 • புது டெல்லி: 99107 97373
• நொய்டா: 99107 97373 • பாட்னா: 99313 37373
• புனே: 6602 8686 • ராய்ப்பூர்: 98932 77373
• திருவனந்தபுரம்: 98954 77373 • வடோதரா: 98983 77373
• விசாகப்பட்டினம்: 98496 77373.

## டு நாட் கால் சேவைகள்

அவ்வப்போது, ஹெச்எஸ்பிஸி குறிப்பிடத்தக்க நன்மைகள் அளிக்கும் பல்வேறு அம்சங்கள்/திட்டங்கள்/வணிக ஊக்குவிப்பு சலுகைகள் பற்றிய தகவல்களை அதன் கார்டுதாரர்களுக்கு தெரிவிக்கிறது மற்றும் இவ்வாறு செய்ய மூன்றாம் தரப்பு ஏஜென்டுகளின் சேவைகளையும் பயன்படுத்தலாம். தொலைபேசி அழைப்புக்கள்/எஸ்எம்எஸ் மூலம் இத்தகைய நன்மைகள் பற்றி உங்களுக்கு தெரிவிக்கப்படுவதை நீங்கள் விரும்பவில்லை எனில், நீங்கள் ‘‘டு நாட் கால்’’ சேவையை தேர்ந்தெடுக்கலாம். இதற்காக நீங்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட படிவத்தை நிரப்பி அனுப்ப வேண்டிய முகவரி: டைரக்ட் ரெஸ்பான்ஸ் செல், ஹெச்எஸ்பிஸி, த.பெ. எண் 631, மும்பை ஜிபிஓ, மும்பை-400 001. உங்களிடமிருந்து கடிதம் கிடைத்த 30 நாட்களுக்குள் உங்கள் கோரிக்கை செயல்படுத்தப்படும்.

பெயர் ______________________

முதல் நடு கடைசி

நகரம் ______________________

தயவுசெய்து கீழ்க்கண்ட தொடர்பு எண்களில் எதையேனும் ஒன்றைப் பதிவு செய்யுங்கள்

தொ. எண். 0 ____ ______________
(எஸ்டிடி கோட்)

மொபைல் எண். 0 ______________

*தி ஹாங்காங் அண்டு ஷாங்காய் பேங்கிங் கார்ப்பரேஷன் லிமிடெட் வெளியிட்டுள்ளது. வரம்புள்ள கடனுடன் ஹாங்காங் SAR ல் நிறுவப்பட்டுள்ளது.*